# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 114/2018/பே

ஆணை நாள்: 01 –10–2018

18.05.2018ம் நாளிட்ட தினகரன் நாளிதழ் செய்தி. –– இம்முறைமன்ற நடுவம் தாமாகவே முன் வந்து வழக்காக பதிவு செய்தது

செயல் அலுவலர்,
திருநின்றவூர் பேரூராட்சி,
திருவள்ளூர் மாட்டம். – –எதிர் மனுதாரர்.

ஆணை.

18.05.2018 நாளிட்ட தினகரன் நாளிதழ் செய்தியில், திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூர் பேரூராட்சியில் பல்வேறு முறைகேடுகள் என தலைப்பிட்டு வெளி வந்துள்ள செய்தியினை, 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 7(i) ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இம்முறைமன்ற நடுவம் தாமாகவே முன்வந்து முறையீடாக பதிவு செய்து, முறையீட்டு மனு எண்.114/2018 என எண்ணிடப்பட்டது. மேற்படி செய்தியில் வெளிவந்துள்ள புகார்கள் தொடர்பாக உண்மை நிலை அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டதன் அடிப்படையில் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

18.05.2018 நாளிட்ட தினகரன் நாளிதழ் செய்தியில், திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூர் பேரூராட்சியில் சொத்து வரி விதித்தல், வரி விதிப்பு பெயர் மாற்றம், மற்றும் குடிநீர் இணைப்பு போன்ற அனைத்து பணிகளுக்கும் கையூட்டு கேட்கப்படுவதாக தெரிவித்து செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவ 11.07.2018 நாளிட்ட அறிவிப்பாணையினைத் தொடர்ந்து, திருநின்றவூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண். 210/2018/அ.1/நாள்.10.08.2018

நாளிட்ட விளக்க அறிக்கையில், திருநின்றவூர் பேரூராட்சியில் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு சொத்து வரி நிர்ணயம் செய்யவும் மற்றும் குடிநீர் இணைப்பு வேண்டியும் எவரும் இதுவரை விண்ணப்பிக்கவில்லை எனவும், குடிநீர் இணைப்பு வேண்டி அளிக்கப்படும் மனுக்கள், பேரூராட்சி அலுவலக வரித்தண்டலர்களால் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, ஆய்வின் அடிப்படையில் உரிய ஆவணங்கள் பெறப்பட்டு, பேரூராட்சி மன்றத் தீர்மானத்தின்படி குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு வருவதாகவும், சொத்து வரி மற்றும் பெயர் மாற்றம் தொடர்பாக பெறப்படும் மனுக்கள், பேரூராட்சி அலுவலக வரித் தண்டலர்களால் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, ஆய்வின் அடிப்படையில் உரிய ஆவணங்கள் பெறப்பட்டு, பேரூராட்சி மன்றத் தீர்மானத்தின்படி சொத்து வரி மற்றும் பெயர் மாற்றம் செய்யப்படுவதாகவும், இதில் முறைகேடுகள் ஏதும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும், திருநின்றவூர் பேரூராட்சி 6–வது வார்டு, மண்டபத் தெரு, மேடான பகுதியாக உள்ளதால் குடிநீர் செல்லாமல் இருந்ததாகவும், பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையின் அடிப்படையில் பேரூராட்சி மன்றத் தீர்மானம் பெறப்பட்டு, மாவட்ட ஆட்சியரின் நிர்வாக அனுமதி, மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு, மேற்படி பகுதியில் தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருவதாகவும், இதில் முறைகேடு ஏதும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் திருநின்றவூர் பேரூராட்சியில் வரைபட அனுமதி வேண்டி பெறப்படும் விண்ணப்பங்கள் உரிய ஆவணங்களின் அடிப்படையிலும், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் வரைபட வரைவாளர் அவர்களின் ஆய்வின் அடிப்படையிலும் உரிய கட்டணங்கள் பெற்றுக் கொண்டு, சம்பந்தப்பட்டவர்களுக்கு கணினி ரசீது வழங்கப்பட்டு வருவதாகவும், இதில் முறைகேடு ஏதும் இல்லை எனவும் தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 11.07.2018 நாளிட்ட அழைப்பாணையினைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவத்தில் 05.09.2018ல் ஆஜரான திருநின்றவூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில், திருநின்றவூர் பேரூராட்சியில் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு சொத்து வரி ரசீது வழங்கவும், குடிநீர் இணைப்பு வழங்கவும் லஞ்சம் கேட்பது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்தியின் அடிப்படையில் இதுவரை மேற்படி பேரூராட்சியில் யாரும் சொத்து வரி விதிக்க மனு செய்யவில்லை எனவும், 6–வது வார்டில் குடிநீர் வழங்க போடப்பட்ட பைப் லைனில், மேட்டு பகுதியில் குடிநீர் செல்லாத நிலை ஏற்பட்டதால் தற்போது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் 80 குடும்பங்களுக்கு நேரடியாக இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், வீடு கட்ட வரைபட அனுமதி பெறும் நேர்வில் விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் வரைபட வரைவாளரின் ஆய்வின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுவதாகவும், எனவே இதில் முறைகேடுகள் ஏதும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். சட்டத்திற்கு புறம்பாக திருநின்றவூர் பேரூராட்சியில் 50 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டிருந்ததாகவும், இவைகளை தல ஆய்வு மேற்கொண்டு அனைத்து இணைப்புகளும் துண்டிக்கப்பட்டதாகவும், பேரூராட்சித் துணைத் தலைவர் பகுதியில் மட்டும் 10 இணைப்புகள் துண்டிக்கப்பட்டதாகவும், இதன் காரணமாக முன்னாள் துணைத் தலைவரால் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஒரு மனு அளிக்கப்பட்டு, அம்மனுவிற்கு தன்னால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகவும், தன்னால் துண்டிக்கப்பட்ட 50 இணைப்புகளுக்கும் அபராதம் விதிக்கப்பட்டு முறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

திருநின்றவூர் பேரூராட்சி செயல் அலுவலரின் 06.09.2018 நாளிட்ட அறிக்கையில் (மின்னஞ்சல் மூலம் பெறப்பட்டது) துண்டிக்கப்பட்ட 50 இணைப்புகளுக்கும் அபராதம், சென்டேஜ்தொகை மற்றும் முறைப்படுத்தும் கட்டணமாக மொத்தம் ரூ.6,67,500/– வசூலிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். இதன் பொருட்டு மேற்படி பேரூராட்சி துணைத் தலைவரால் மாவட்ட ஆட்சியருக்கு அளிக்கப்பட்ட மனுவிற்கும் உரிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி நாளிதழ் செய்தி உண்மைக்கு புறம்பானதென குறிப்பிட்டும், மேற்படி விவரங்களை குறிப்பிட்டும், வரப்பெற்றுள்ள பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கையினை பதிவு செய்தும், இப்பொருள் தொடர்பான மேல் நடவடிக்கையினை கைவிட இம்முறைமன்ற நடுவம் தீர்மானித்து அவ்வாறே ஆணையடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 01 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–**

17/10/2018

செயலாளர்

பெறுநர்

1.செயல் அலுவலர்,
திருநின்றவூர் பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.

2.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருவள்ளூர் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருவள்ளூர்.

17/10/18